# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் நவம்பர் - 2016

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412** **ஜனவரி 16, 2017**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், நவம்பர் 2016 இற்கான மாதாந்த கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) இனை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது ஒரு பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை ஆரம்ப கட்டத்தில் அடையாளங்காண பயன்படுகின்றது. 2016 நவம்பர் மாதத்திற்கான மாதாந்த IIP குறிகாட்டி வெளியீட்டின் போது, தொகைமதிப்புப் புள்ளிவிபரத திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ஏ.ஜே.சத்தரசிங்க அவர்கள் குறிப்பிடுகையில் மாதாந்த அடிப்படையில் IIP குறிகாட்டி ஐப்பசி 2016 இலிருந்து கணிப்பிடப்படுவதுடன் இந்நாளிலிருந்து 45 நாட்கள் இடைவெளியில் இச்சுட்டி வெளியிடப்படும். வேறுபட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட IIP சுட்டெண்கள் ஒப்பிடப்பட முடியாதவை.

திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட வருடாந்த கைத்தொழில் அளவீடு - 2015 தரவுகளைப் பயன்படுத்தி கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணைக் கணிப்பதற்கான நிறைகள் மதிப்பிடப்பட்டன என குறிப்பிட்டுள்ளார். உற்பத்தித் துறையின் உற்பத்திகளின் பெறுமதி சேர் அடிப்படையில் எடைகளின் மதிப்பு பெறப்பட்டன. நாட்டின் மொத்த கைத்தொழில் உற்பத்தியில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகளவு பங்களிப்பை செலுத்துவதுடன் (35.2%) ஆடை அணிகலன் உற்பத்தி (19.8%) மற்றும் உலோகமல்லாத தாதுப் பொருட்கள் போன்ற கைத்தொழில்கள் (7.8%) அடுத்த இரண்டு நிலைகளை பிடித்துள்ளன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | IIP(2015=100) |
|---|---|
| நவம்பர் -2016 | 104.5 |

வெளியிடப்பட்ட IIP பெறுமதிகளின் படி, 2015 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2016 நவம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 4.5%ஆல் அதிகரித்துள்ளது. 2015 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2016 நவம்பர் மாத உற்பத்திகளில் உற்பத்திக் கைத்தொழில், ஏனைய உலோகமல்லாத தாதுப் பொருள் உற்பத்தி (20.8%) மற்றும் தளபாட உற்பத்தி (20.0%) குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றது. நவம்பர் மாதத்தில் உணவு உற்பத்தியானது 2.3% ஆல் அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2015 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் நவம்பர் மாதக் கைத்தொழிலில் கோக், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தி(20.6%), இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் (1.4%) மற்றும் பலகை உற்பத்தி(1.1%) வீழ்ச்சியைக் காட்டுகின்றன. IIP தொடர்பான மேலதிக தகவல்களைத் திணைக்களம் அதன் இணையத்தளமான www.statistics.gov.lk/Industries இல் வெளியிட்டுள்ளது.